செ.வெ. எண்: 382 நாள்: 03.07.2012

# செய்தி வெளியீடு

ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தையும், நேர்மையாக செயல்படும் தன்மையையும், வெற்றியினையும், தோல்வியையும் சமமாக பாவிக்கும் பக்குவத்தையும் அளிக்கக்கூடியது விளையாட்டு.

இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த விளையாட்டின் மீதான ஆர்வத்தை இளைஞர்களிடையே ஏற்படுத்தும் வகையில், 1992 ஆம் ஆண்டு, இளைஞர் மற்றும் விளையாட்டுப் பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து இந்திய விளையாட்டு ஆணையத்திற்கு இணையான "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்", Sports Development Authority of Tamil Nadu என்ற ஒரு ஆணையத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உருவாக்கினார்கள். இதுமட்டுமல்லாமல், இளைஞர்களின் திறமைகளை கண்டறிந்து, அவர்களுக்கு தக்க பயிற்சி மற்றும் நிதியுதவியினை வழங்குதல், தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் சாதனைகள் புரிந்திடும் வகையில் பல்வேறு ஊக்க உதவிச் சலுகைகளை வழங்குதல் போன்ற எண்ணற்ற நடவடிக்கைகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2002-ல் ஒலிம்பிக், ஆசிய, காமன்வெல்த், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று பதக்கம் வெல்லும் தமிழக வீரர்கள் வீராங்கனைகளை கௌரவிக்கும் வகையில் உயரிய ஊக்கத் தொகை வழங்க ஆணையிடப்பட்டது. சென்ற ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்த ஊக்கத்தொகையை இரட்டிப்பாக்கி உத்தரவிட்டார்கள்.

அதிகரித்து வரும் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும், விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையிலும் தற்பொழுது விளையாட்டு வீரர்களுக்கு ஆண்டுதோறும் கலந்தாய்வின் மூலம் நடைபெறும் பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கையில் வழங்கப்பட்டு வரும் 100 இடங்கள் ஒதுக்கீட்டினை இந்த ஆண்டு முதல் அதாவது 2012-13 முதல் 500 இடங்களாக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, பன்னாட்டு, தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் வெற்றி பெற்றவர்களுக்கும் அரசு நிர்ணயித்துள்ள வழிகாட்டுநெறிகளின் அடிப்படையில் பொறியியல் படிப்பிற்காக அரசால் நடத்தப்பெறும் கலந்தாய்வு மூலம் நடைபெறும் மாணவர் சேர்க்கையில் 500 இடங்கள் ஒதுக்கப்படும்.

விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்கும் இந்த நடவடிக்கை, மேலும் பல இளைஞர்களை விளையாட்டில் ஆர்வம் கொள்ளச் செய்வதோடு, தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையிலான சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கவும் அவர்களுக்கு உயர்கல்வி பயில வாய்ப்பளிக்க ஏதுவாகவும் அமையும்.

இதன் மூலம், தமிழக மாணவச் செல்வங்கள் கல்வி, விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும் ஒளிர்ந்து மிளிர வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சீரிய நோக்கம் நிச்சயமாக நிறைவேறும்.

*****

வெளியீடு:இயக்குநர்,செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

நாள் : 3–7–2012